**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 134 of 2024

Depositions of PW - 6 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : திரு. சண்முகவேலு

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of August** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.06.2024 ம் தேதி நான் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது காவல் நிலைய தலைமை காவலர் திருமதி.பிரேமலதா அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது மாணிக்கம் என்பவரது மகன் சங்கரபாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி கருமத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.244/2024 சட்டப்பிரிவு 279, 304-A இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2. அதன்பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துகொண்ட உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்கள் 02.06.2024 ம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோகுல் மற்றும்

சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் சாட்சிகள் சங்கரபாண்டியன், பிரபு, முத்துசாமி, சுதா, கோகுல், சங்கர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இறப்பிற்கான காரணம் அறிய வேண்டி கோவை ESI மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று சவக்கிடங்கின் முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்து முன்னிலையில் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணை சாட்சிகள் முத்துசாமி, ரத்தினம், பரணிகுமார், ராஜவேல் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் இறந்து போன நபரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.

3 பின்னர் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துகொண்ட நான் 06.06.2024 ம் தேதி இவ்வழக்கில் தன்னிச்சையாக நிலையம் ஆஜரான எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். அதன் பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன ஜீவானந்த் என்பவரின் TN 22 DL 2346 என்ற வாகனம் மற்றும் எதிரி ஓட்டிச் சென்று விபத்து ஏற்படுத்திய TN 78 F 3690 என்ற வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்க பெற்றேன். TN 22 DL 2346 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 78 F 3690 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாகனத்தை ஆய்வு மேற்கொண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முகசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் வழக்கில் காயம்பட்டு இறந்துபோன ஜீவானந்த் அவர்களின் இறப்பை உறுதி செய்து பிரேதத்தின் பிரேத பரிசோதனை மேற்கொண்ட கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் வினோத்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புலன் விசாரணை முடித்து 06.06.2024 ம் தேதி சட்டப்பிரிவு 279, 304-A இதசவின் படி குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் புகைப்படத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்த நபர் ஓட்டுநர் உரிமம் புலன் விசாரணையின் போது நான் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு

வாகனங்களையும் நான் பார்த்துள்ளேன். காரின் முன் இடதுபகுதி மோதியதாக தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்திற்கு வலதுபுறமாகதான் சேதாரங்கள் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். வாகனம் கீழே விழுந்ததால் இருபுறங்களிலும் சேதாரங்கள் ஏற்பட்டது. நான் விசாரித்த சாட்சி பிரபு காரின் இடதுபுறம் இருசக்கர வாகனத்தின் மீது பலமாக மோதிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் Left side engine assembly damaged, front right side body scratch marks ஏற்பட்டதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அரசு தரப்பு வழக்கின் படி விபத்து ஏற்பட்டிருந்தால் நிச்சயம் இருசக்கர வாகனத்தின் வலது புறம் சேதாரங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும், மேற்படி சம்பவமானது அரசு தரப்பு வழக்கின் படி நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் front left side door assembly damaged, front left side rear view mirror damaged, bonnet left side dented அனைத்து சேதாரங்களும் நான்கு சக்கர வாகனத்தின் இடதுபுறமாக ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான்.

3. இருசக்கர வாகனம் அதிவேகமாக வந்து காரின் மீது மோதியதால் தான் அதிகளவில் எதிரியின் காருக்கு சேதாரங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. BMW இருசக்கர வாகனத்தில் வந்தபோது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ விபத்தானது தேசிய நெடுஞ்சாலை 6 வழி சாலை என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்பவத்தில் இறந்த நபரின் அஜாக்கிரதையால் கூட ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. நான் விசாரித்த சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் சம்பவத்தில் இறந்த நபரின் நண்பர்கள் என்றால் சரிதான்.

4. சாட்சி பிரபு நீதிமன்ற முதல் விசாரணையில் பண்ணைபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி பிரவு நீதிமன்ற முதல் விசாரணையில் கோகுல் என்பவரை அழைத்து கொண்டு பேஷன் ப்ரோ வாகனத்தில் சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி கோகுல் நீதிமன்ற விசாரணையில் தானும் BMW வாகனத்தில் சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி கோகுல் நீதிமன்ற குறுக்கு விசாரணையில் பிரபு சென்னையில் குடியிருந்து வருவதாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

5. சாட்சி கோகுல் BMW வாகனங்கள் பழுது பார்க்கும் கடை வைத்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி கோகுல் சம்பவத்தில் இறந்த ஜீவானந்தம், சாட்சி பிரபு இருவரும் தன்னுடைய கஷ்டமர் என சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சரிவரப் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சி பிரபு மற்றும் கோகுல் இருவரை

தவிர்த்து வேறு யாரையும் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

6. சம்பவத்தில் இறந்த ஜீவாகனந்தம் அதிவேமகாக இருசக்கர வாகனத்தில் சென்றதால் மேம்பாலத்திலிருந்து கீழே தூக்கி எறியப்பட்டார் என்றால் சரியல்ல. எதிரி சம்பவத்தின் போது அவரது குடும்பத்துடன் சென்றுகொண்டிருந்தார் என்றால் அது சம்பந்தமாக எனது புலன்விசாரணையில் தெரியவில்லை. ஜீவானந்தத்தின் நண்பர்கள் வேறு யாரையும் நான் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்த ஜீவானந்தம் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.25 19:06:52 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**